செ.வெ.எண். 01/ஜனவரி நாள்: 02.01.2017

# தருமபுரி மாவட்டம்

## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ. 1 இலட்சத்து 28 ஆயிரம் மதிப்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.





தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (02.01.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 193 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

முன்னதாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நீரில் மூழ்கி மரணமடைந்தவர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு நிவாரண தொகையாக ரூ. 65 ஆயிரத்திற்கான காசோலைகளை 2 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் முடநீக்கு உபகரணங்கள் 11 நபர்களுக்கும், சக்கர நாற்காலி 1 நபருக்கும் என மொத்தம் 12 நபர்களுக்கு ரூ. 63 ஆயிரத்து 400/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும் மற்றும் மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் 12 மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திரு. கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகளையும் வழங்கி பாராட்டினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. பாப்பாத்தியம்மாள், தனி துணை ஆட்சியர் (கலால்) திருமதி. மல்லிகா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி. சித்ரா, ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்

திருமதி. இலாஹிஜான்,  முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. அமீர்பாஷா, முடநீக்கு வல்லுநர் திரு. ஜகன்  உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள்  தொடர்பு அலுவலர்,
தருமபுரி.